DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

Deposition of Witness

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - சந்திரசேகர் | **PW-1** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டது.)

<u>முதல் விசாரணை:</u>-

நான் மூலப்பாளையத்தில் குடியிருந்து பில்டிங் காண்ட்ரேக்டராக பணி செய்து வருகிறேன். விபத்தில் காயம்பட்ட சுகன்யா என்னுடைய அண்ணி ஆவார், இறந்து போன ஹர்ஷிதா அவருடைய மகள். கடந்த 11.09.2020 ம்தேதி பவானி ரோட்டில் அமராவதி நகரில் பேருந்து நிறுத்தத்திற்கு சற்று முன்பு ஒரு நண்பருக்காக காத்திருந்தேன். அப்போது காலை சுமார் 10.30 மணி இருக்கும். அப்போது சுகன்யா Pleasure இருசக்கர வாகனத்தை ஓட்டிக் கொண்டும், அதன் பின்னால் ஹர்ஷிதா அமர்ந்து கொண்டும் பவானி - ஈரோடு சாலையில் ஈரோட்டில் இருந்து பவானி நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 33 BS 7733 ஆகும். அப்போது மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்புறமாக TN 30 N 1206 என்ற பேருந்து ஈரோட்டில் இருந்து பவானி நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. மேற்படி பேருந்தின் முன்பக்க பம்பர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அவர்களை தட்டி விட்டது. உடனே நிலைதடுமாறி மேற்படி சுகன்யாவும், ஹர்ஷிதாவும் சாலையில் விழுந்துவிட்டார்கள். சுகன்யா இடதுபக்கமும், ஹர்ஷிதா வலது

பக்கமும் விழுந்தார்கள். ஹர்ஷிதா மீது மேற்படி பேருந்தின் இடது பின்பக்க சக்கரம் ஏறி இறங்கி விட்டது. அருகில் இருந்த நாங்கள் போய் பார்த்தோம். சுகன்யாவிற்கு சிறிய சிராய்ப்பு காயங்கள் தான் இருந்தது. உடனடியாக தனியார் ஆம்புலன்ஸிற்கு போன் மூலம் தகவல் சொல்லி காயம்பட்ட ஹர்ஷிதாவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்பு விபத்து தொடர்பாக என் அண்ணன் சிவசங்கர் என்பவருக்கு தகவல் கொடுத்தேன். பின்னிட்டு சித்தோடு காவல் நிலையம் சென்று விபத்து தொடர்பாக நான் புகார் கொடுத்தேன். சிறிது நேரத்தில் மேற்படி ஹர்ஷிதா இறந்துவிட்டதாக தகவல்கிடைத்தது. மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆகும். விபத்தை ஏற்படுத்திய பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரை நான் பார்த்தேன். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். (எதிரி இன்று ஆஜரில்லை.) அவரது பெயர் முருகேசன் ஆகும். ஈரோடு அரசு மருத்துவமனையில் மேற்படி ஹர்ஷிதாவின் உடலின் மீது பிரேத விசாரணை நடந்தது. நான் சாட்சியாக உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

எதிரி வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.